# INDIAN SCHOOL SALALAH

## ACADEMIC YEAR 2026 – 2027

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| Roll No: | | | | | | Assessment Type: **FIRST TERM EXAMINATION SEPTEMBER - 2026** | |
| Grade: VII | | | | | | Marks Obtained: | **80** |
| Subject: TAMIL (SL)<br>Subject code: (006) | | | | | | | |
| Date of Assessment: 17.09.2026 | | | | | | | |

**General Instructions:**

- This question paper contains **14** questions in **7** pages.
- Marks are indicated against each question.

| S.No | Questions | Marks |
|---|---|---|
| 1. | **பகுதி (அ) (படித்தல்) READING**<br>**கீழ்க்காணும் பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளி.**<br>முத்துராமலிங்கத் தேவர் இந்திய விடுதலைப் போராட்டத்தில் தீவிரமாக பங்கேற்றார். தமது பேச்சாற்றலால் ஆங்கில ஆட்சிக்கு எதிராக மக்களிடம் பெரும் எழுச்சியை ஏற்படுத்தினர். இவரது விடுதலை வேட்கையை அறிந்த தி.ரு.வி. கல்யாணசுந்தரனார் தேசியம் காத்த செம்மல் என்று பாராட்டியுள்ளார். வங்கச் சிங்கம் என்று போற்றப்பட்ட நேதாஜி சுபாஷ் சந்திரபோசுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார். அவரை தமது அரசியல் குருவாக ஏற்றுக் கொண்டார். நேதாஜி மதுரைக்கு வருகை தந்த போது நேதாஜி தொடங்கிய இந்திய தேசிய ராணுவத்தில் முத்துராமலிங்கத்தேவரின் முயற்சியால் ஏராளமான தமிழர்கள் இணைந்தனர். அவருடைய பேச்சாற்றல் அனைவரையும் கவர்ந்தது. முத்துராமலிங்கத்தேவர் அவர் முதன்முதலில் சாயல்குடி என்னும் ஊரில் விவேகானந்தரின் பெருமை என்னும் தலைப்பில் உரையாற்றினார். அந்தக் | 5x1=5 |

| | | |
|---|---|---|
| | கூட்டத்தில் பெருந்தலைவர் முத்துராமலிங்க தேவரின் வீரமிக்க பேச்சை விடுதலைப் போருக்கு மிகவும் உதவும் என்றார் காமராஜர். பின்பு சிங்கத்தின் முழக்கம் போலவே இருந்தது என்று அறிஞர் அண்ணா அவரை புகழ்ந்துரைத்துள்ளார். மேடைப் பேச்சாற்றலில் சிறப்பு மிக்கவராக திகழ்ந்த இவர் ஒரு முறை சட்டமன்ற உறுப்பினராக இருந்த பொழுது அவர் நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரை வல்லபாய் பட்டேல் போன்ற மேதைகளின் பேச்சைப் போல் இருந்ததாக வட இந்திய இதழ்கள் பாராட்டினர்.<br><br>**<u>வினாக்கள்.</u>**<br><br>I. முத்துராமலிங்கத்தேவர் முதன்முதலில் உரையாற்றிய இடம். ________<br>II. தேசியம் காத்த செம்மல் என்று பாராட்டியவர். __________<br>III. வங்கச் சிங்கம் என்று போற்றப்பட்டவர். _______<br>IV. தமது அரசியல் குருவாக ஏற்றுக் கொண்டார் ____________<br>V. முத்துராமலிங்கர் ஆற்றிய உரை __________பேச்சைப்போல் இருந்தது. | |
| **2.** | **பகுதி (ஆ) c- GRAMMAR**<br><br>**சான்று தருக.**<br><br>I. வீட்டுப்பாடத்தை முடிப்பான். (**இறந்தகால தொடராக மாற்றுக**)<br>அ) வீட்டுப்பாடத்தை முடிப்பான். ஆ) வீட்டுப்பாடத்தை முடிகிறான்.<br>இ) வீட்டுப்பாடத்தை முடித்தான். ஈ) வீட்டுப்பாடத்தை முடித்திலன்.<br><br>II. மழை **சடசட** வென பெய்தது இத்தொடரில் அமைந்துள்ளது<br>அ) அடுக்குத்தொடர் ஆ) இரட்டைக்கிளவி<br>இ) செய்தித்தொடர் ஈ) மங்களம்<br><br>III. நெடில்தொடர்க் குற்றியலுகரம் சான்று ________<br>அ) காது ஆ) பத்து இ) கயிறு ஈ) எஃகு | **5X1=5** |

| | | |
|---|---|---|
| | IV. **செல்கின்றான்** என்பதற்கு உரிய பால்<br>அ) ஆண்பால் ஆ) பெண்பால் இ) பலவின்பால் ஈ) ஒன்றன்பால்<br>V. நான் நடனம் ஆடினேன். (**எதிர்கால தொடராக மாற்றுக**).<br>அ) நான் நடனம் ஆடிலன். ஆ) நான் நடனம் ஆடினன்.<br>இ) நான் நடனம் ஆடுகிறான். ஈ) அ, நான் நடனம் ஆடுவேன் | |
| **3.** | **நிரப்புக**.<br>I. சார்பெழுத்துகள் ________________ வகைப்படும்.<br>அ) இரண்டு ஆ) ஐந்து இ) மூன்று ஈ) பத்து<br>II. தனக்குரிய ஒரு மாத்திரை அளவில் குறுகி ஒலிக்கும் "**இகரம்**"<br>___________ எனப்படும்.<br>அ) குற்றியலுகரம் ஆ) குற்றியலிகரம்<br>இ) முற்றியலுகரம் ஈ) முற்றியலிகரம்<br>III. காலம் ____________ வகைப்படும்.<br>அ) இரண்டு ஆ) ஐந்து இ) மூன்று ஈ) ஒன்று<br>IV.பகுபத உறுப்புகள் ___________ வகைப்படும்.<br>அ) ஆறு ஆ) ஐந்து இ) இரண்டு ஈ) பத்து<br>V. நன்னூலின்படி தமிழிலுள்ள ஓரெழுத்து ஒருமொழிகளின் எண்ணிக்கை<br>அ) 40 ஆ) 42 இ) 44 ஈ) 46 | **5X1=5** |
| **4.** | **பகுபத உறுப்பிலக்கணம் உறுப்புகளை எழுதுக.**<br>**I.** போவான் = போ + வ் + ஆன்<br>**II.** வந்தனன் - வா(வ) + த்(ந்) + த் + அன் + அன் | **2X2 ½ = 5** |

| | | |
|---|---|---|
| 5. | **பகுதி (இ) (இலக்கியம்) - LITERATURE**<br>**பின்வரும் பாடலைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக.**<br>**முல்லைக்குத் தேர்க்கொடுத்தான் வேள்பாரி - வான்**<br>**முகிலினும் புகழ்படைத்த உபகாரி - கவிச்**<br>**சொல்லுக்குத் தலைகொடுத்தான் அருள்மீறி - இந்த**<br>**வள்ளலாம் குமணன்போல் வாழ்ந்தவர் வரலாறு**<br>**(ஒன்றல்ல இரண்டல்ல தம்பி….)**<br>**வினாக்கள்.**<br>I. **முகில்** என்பதன் பொருள். ________<br>அ) பொருள் ஆ) மேகம் இ) வழி ஈ) காற்று<br>II. முல்லைக்குத் தேர்க்கொடுத்தவன். ________<br>அ) பாரி ஆ) மாரி இ) காரி ஈ) பேகன்<br>III. சொல்லுக்குக் தலைகொடுத்தவன். _______<br>அ) அரசன் ஆ) புலவர் இ) குமணன் ஈ) பாரி<br>IV. **உபகாரி** என்பதன் பொருள். __________<br>அ) புலவர் ஆ) தானம் இ) வேந்தன் ஈ) வள்ளல்<br>V. இப்பாடலின் ஆசிரியர். ________<br>அ) நாரயணகவி ஆ)பாரதியார் இ) கம்பர் ஈ) சுரதா | 5X1=5 |
| 6. | **கோடிட்ட இடங்களை தகுந்த திருக்குறள் சீர்களால் நிரப்புக.**<br>I. வாய்மை எனப்படுவது ____________ யாதொன்றும்<br>தீமை இலாத ___________.<br>II. இயற்றலும் ___________ காத்தலும் காத்த<br>வகுத்தலும் _________ அரசு | 4X1=4 |

| | | |
|---|---|---|
| **7.** | **சரியான விடையைத் தேர்தெடுத்து எழுதுக.**<br>I. வானில் முழு நிலவு அழகாகத் ________ அளித்தது.<br>அ) தயவு ஆ) தரிசனம் இ) துணிவு ஈ) தயக்கம்<br>II. "**விலங்கொடித்து**" என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது.<br>அ) விலம் + கொடித்து ஆ) விலம் + ஒடித்து<br>இ) விலன் + ஒடித்து ஈ) விலங்கு + ஒடித்து<br>III. "**வான் + ஒலி**" என்பதனை சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்.<br>அ) வான்ஒலி ஆ) வாவொலி இ) வானொலி ஈ) வானெலி<br>IV. பகைவரை வெற்றி கொண்டவரைப் பாடும் இலக்கியம்<br>அ) கலம்பகம் ஆ) பரணி இ) பரிபாடல் ஈ) அந்தாதி<br>V. மொழியின் முதல் நிலை கேட்டல், ________ ஆகியனவாகும்.<br>அ) படித்தல் ஆ) பேசுதல் இ) எழுதுதல் ஈ) வரைதல்<br>VI. தொல்காப்பியம் கடற்பயணத்தை ______ வழக்கம் என்று கூறுகிறது.<br>அ) நன்னீர் ஆ) தண்ணீர் இ) முந்நீர் ஈ) கண்ணீர்<br>VII. வாய்மை எனப்படுவது. ________________<br>அ) அன்பாகப் பேசுதல் ஆ) தீங்கு தராத சொற்களைப் பேசுதல்<br>இ) தமிழில் பேசுதல் ஈ) சத்தமாகப் பேசுதல்<br>VIII. தமிழின் கிளைமொழிகளுள் ஒன்று. ___________<br>அ) உருது ஆ) இந்தி இ) தெலுங்கு ஈ)ஆங்கிலம் | **8X1=8** |
| **8.** | **பொருத்துக.**<br>I. ஏரா - அ) திசைகாட்டும் கருவி<br>II. பருமல் - ஆ) அடிமரம்<br>III. மீகாமன்- - இ) குறுக்கு மரம்<br>IV. காந்த ஊசி - ஈ) கப்பலைச் செலுத்துபவர் | **4X1=4** |

| | | |
|---|---|---|
| | | |
| **9.** | **எவையேனும் <u>குறுவினா</u>க்களுக்கு <u>ஐந்துக்கு</u> மட்டும் விடையளி.**<br>I. தமிழ்மொழியின் பண்புகளாக நாமக்கல் கவிஞர் கூறுவன யாவை?<br>II. மொழியின் இரு வடிவங்கள் யாவை?<br>III. காட்டுப் பூக்களுக்கு எதனை உவமையாக் சுரதா குறிப்பிடுகிறார்?<br>IV. பேச்சு மொழி என்றால் என்ன?<br>V. பகத்சிங் கண்ட கனவு யாது?<br>VI. தோணி என்ற சொல்லின் பெயர்க்காரணத்தைக் கூறுக.<br>VII. வாழும் நெறி யாது? | **5x2=10** |
| **10.** | **எவையேனும் <u>சிறுவினா</u>க்களுக்கு <u>இரண்டுக்கு</u> மட்டும் விடையளி**<br>I. பேச்சு மொழிக்கும் எழுத்து மொழிக்கும் இடையே உள்ள வேறுபாடுகளுள் நான்கினை விளக்குக.<br>II. "**காடு**" பாடலில் விலங்குகளின் செயல்களாகக் கவிஞர் சுரதா கூறுவனவற்றை எழுதுக.<br>III. கலங்கரை விளக்கம் - சிறு குறிப்பு வரைக.<br>IV. இந்தியத்தாய் எவ்வாறு காட்சியளிக்கிறாள்? | **3x2=6** |
| **11.** | **பகுதி- (ஈ) (விரிவானம்) - DETAIL**<br>**எவையேனும் துணைப்பாடக் கட்டுரைக்கு <u>ஒன்றுக்கு</u> மட்டும் விடையளி.**<br>**[விலங்குகளின் உலகம்]** என்னும் கதையை சுருக்கி ஒரு பக்க அளவில் எழுதுக.<br>**முன்னுரை - முண்டந்துறை புலிகள் காப்பகம் - விலங்குகளின் சிறப்புகள் - காடுகளின் பாதுகாப்பு - முடிவுரை** | **1x6=6** |

| | | |
|---|---|---|
| | **(அல்லது)**<br>**[ஆளுக்கு ஒரு வேலை]**<br>**முன்னுரை - பையனின் பிடிவாதமும் பெற்றோர் அறிவுரையும் - விளையாட அழைத்தல் - மனமாற்றம் - முடிவுரை** | |
| **12.** | **பகுதி - (உ) (படைப்பாற்றல்) CREATIVITY**<br>**பின்வரும் தலைப்புகளில் ஏதேனும் ஒரு கட்டுரை எழுதுக.**<br>I. **[ நாம் விரும்பும் தலைவர் வ. உ. சிதம்பரனார் ]**<br>முன்னுரை - பிறப்பும் இளமையும் - சுதேசி இயக்கம் மற்றும் கப்பல் பயணம் - தியாகமும் சிறைவாசம் - முடிவுரை<br>**(அல்லது)**<br>II. **[தாய்மொழிப்பற்று]** - முன்னுரை - மொழி பற்றிய விளக்கம்- தாய்மொழி - தாய்மொழிப் பற்று - நமது கடமை - முடிவுரை | **1x6=6** |
| **13.** | **ஏதேனும் ஒரு தலைப்பில் கடிதம் ஒன்று எழுதுக.**<br>I. நீங்கள் சென்று வந்த சுற்றுலா குறித்து உங்கள் நண்பனுக் கடிதம் எழுதுக. **(முகவரி - ப. இளங்கதிர் , 23 பெரியார் வீதி ,சேலம் -3)**<br>**(அல்லது)**<br>II. உங்கள் பகுதியில் நூலகம் அமைத்து தர வேண்டி நூலக ஆணையாளருக்கு கடிதம் எழுதுக.<br>**(முகவரி - முகிலன், பாரதி நகர், ஈரோடு-6)** | **1x7=7** |
| **14.** | **கலைச்சொல் தருக.**<br>**I. Media -** **II. natural resource -**<br>**III. Puppetry –** **IV. Unity quality -** | **4x1=4** |